<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 86/2022 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | தரணிதரன் | | | |
| **Date** | **:** | **03.12.2024** | | | |
| **Time** | **:** | **11.18 a.m to 11.44 p.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு. தரணிதரன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பிரமாண வாக்குமூலம் பத்தி 4,7 ல் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை இல்லை என்பதால் தான் அது தொடர்புடைய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 18.02.2022 நிர்வாக சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை ஆட்சேபிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்படவில்லை என தெரிவித்திருந்த போது அதன் பின்னர் ஆட்சேபனை தெரிவித்து கடிதம் எதுவும் நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டதா? என்றால் அனுப்பினேன் ஆனால் தேதி நினைவு இல்லை. அதுபோன்ற கடிதம் எதுவும் அனுப்பவில்லை என்றாலும் அனுப்பியிருந்தால் அது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும் நான் நிர்வாகத்திற்கு கண்டிப்பாக அனுப்பியுள்ளேன். அவ்வாறு உண்மையில் அனுப்பி இருந்தால் அடுத்த தேதியில் நடந்த விசாரணையின் போது அது சம்பந்தமாக தெரிவித்திருப்பேன் என்றாலும் தெரிவிக்காததில் இருந்து அதுபோன்ற

கடிதம் எதுவும் அனுப்பப்படவில்லை என்பது தெரியவரும் என்றாலும் சரியல்ல. உள்விசாரணையில் நான் முழுமையாக பங்கு கொண்டு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு விசாரணை நடைபெற்று இருக்கும் காரணத்தினால் உள்துறை விசாரணை முறையாக நடைபெறவில்லை என முன் வைக்கப்படும் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. உள்துறை விசாரணை என்பது சக தொழிலாளியை உதவிக்கு அழைத்துக் கொள்ளலாம் என விசாரணை அதிகாரி தெரிவித்த போதும் நான் தேவையில்லை என தெரிவித்து விட்டேன் என்றால் யோசித்து சொல்வதாக சொல்லிவிட்டு வந்து விட்டேன் ஆனால் சக தொழிலாளிகள் கம்பெனி நோட்டீஸ் போர்டில் யாராவது தொழிலாளிக்கு விசாரணையில் உதவிக்கு சென்றால் அவர்களுக்கும் அதே நிலைமை தான் ஏற்படும் என ஒட்டி இருப்பதாக தெரிவித்தார்கள் அதனால் சக தொழிலாளியை நான் அழைக்கவில்லை. இது சம்பந்தமாக விசாரணை அதிகாரியிடம் புகார் தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. யாரையும் போகக்கூடாது என தெரிவித்து நோட்டீஸ் ஒட்டியது சம்பந்தமாக நிர்வாகத்திடம் கடிதம் அனுப்பி தகவல் எதுவும் கேட்டேனா என்றால் இல்லை. நிலையாணையில் இருப்பதாக சொன்ன காரணத்தினால் கேட்கவில்லை. நான் சக தொழிலாளியை அழைத்து செல்லாததற்கு காரணம் நாளைக்கு அவர்களுக்கும் எனக்கு வந்தது போன்று பிரச்சனை வரக்கூடாது என்பதற்காக

தான். மேற்படி விவரங்களை நான் என்னுடைய மனுவிலோ பிரமாண வாக்குமூலம் சாட்சியத்திலோ சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. நிர்வாகம் சக தொழிலாளி யாரும் போகக்கூடாது என அறிவிப்பு எதுவும் ஒட்டவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக மேற்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உள்விசாரணை வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் நடைபெற்றதா என்றால் நிர்வாக தரப்பு சாட்சிக்கு வர இயலவில்லை என்பதால் நடைபெற்றது. CD பதிவுகள் வழங்கப்படவில்லை என்பது சம்பந்தமாக கடிதம் எதுவும் அனுப்பினேன் என்றால் இல்லை ஆனால் அது சம்பந்தமாக விசாரணை அதிகாரியிடம் தெரிவித்தேன். நான் வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் நடைபெற்ற விசாரணையின் பதிவுகளை கேட்டேன் தருவதாக சொன்னார்கள் ஆனால் அது அழிந்து விட்டதாக சொல்லி மீண்டும் விசாரணை பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்து இரண்டாவது முறை பதிவு செய்தார்கள் நான் முதல் முறை கேட்ட கேள்விகள் எனக்கு நினைவு இல்லாத காரணத்தினால் இரண்டாவது முறை பதிவு செய்யப்பட்டபோது சரியான விசாரணை மேற்கொள்ள என்னால் இயலாமல் போய்விட்டது மேலும் இருவரையும் அருகருகே உட்கார வைத்து உள்விசாரணை நடத்தினார்கள். என்னுடன் இருந்த மற்றொரு நபர் பிரகாஷ் என்ற தொழிலாளி ஆவார் அவருக்கும் என்னுடன் சேர்த்து உள்வவிசாரணை ஒரே சமயத்தில் நடந்தது. 04.05.2021 அன்று சிடி பதிவு நகல் பெற்றுக் கொண்டதாக கையெழுத்து போட்டு உள்ளேன் என்றால் ஆமாம் கட்டாயப்படுத்தி வாங்கி கொள்ள சொன்னார்கள். உள்விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடைபெற்று போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கும்

காரணத்தினால் முறையாக நடைபெறவில்லை என முன்வைக்கும் வாதம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. 11.01.2021 அன்று மற்றும் ஒரு குற்றச்சாட்டு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த குற்றச்சாட்டின் பேரிலும் உள்விசாரணை நடைபெற்றது என்றால் ஆமாம். அது சம்பந்தப்பட்ட உள்விசாரனையிலும் நான் கலந்து கொண்டு கையெழுத்து போட்டு உள்ளேன் என்றால் ஆமாம். அந்த உள்விசாரணையிலும் சக தொழிலாளி வேண்டாம் என சொல்லிவிட்டேன் என்றால் ஆமாம். அதற்கு நான் மேலே சொன்ன அதே காரணம் தான். இரண்டாவது உள்விசாரணையும் இயற்கை நீதி கோட்பாட்டுக்கு உட்பட்டு தான் நடைபெற்றது என்றால் சரியல்ல. இரண்டு குற்றச்சாட்டுகளின் விசாரணை முடிவில் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு கொடுத்த பதிலில் பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் சொல்லி உள்ள குற்றச்சாட்டுகளை முன்வைக்கவில்லை என்றால் எனக்கு தெரிந்த அனைத்தையும் நான் தெரிவித்து விட்டேன். உள்துறை விசாரணை முறையாக நடைபெற்றது என முடிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உள்துறை விசாரணை ஆடியோ வீடியோ பதிவு செய்ய வேண்டும் என நான் கேட்ட கோரிக்கை நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நான் தொழிற்சங்கத்தில் துணைச் செயலாளராக இருந்தேன். கம்பெனியில் சான்றிட்ட நிலையாணை இருக்கும் விவரம் தெரியும். நிலையாணையில் உள்துறை விசாரணையை ஆடியோ வீடியோ பதிவு செய்ய விதி

இல்லை என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.12.05 15:29:24 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:03.12.2024